# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2132/4 - 2019 ජූලි මස 15 වැනි සඳුදා - 2019.07.15

*2132/4 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், (393ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 2019, சனவரி மாதம் 16 ஆந் திகதிய 2106/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2019, சனவரி மாதம் 14 ஆந் திகதி தாபிக்கப்பட்ட 2015, சனவரி மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் 2018, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலத்தில் அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல்கள், மோசடிகள், நம்பிக்கையின் குற்றவியல் ரீதியான மீறுகை, சொத்துக்கள் மீதான குற்றவியல் கையாடல், ஏமாற்றுதல் மற்றும் தத்துவம் அல்லது அதிகாரம், அரச வளங்கள் மற்றும் சிறப்புரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்தல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பாகப் புலனாய்வு செய்வதற்கான விசாரணை ஆணைக்குழுவின் தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய 2019, யூலை மாதம் 14 ஆந் திகதி முடிவுறும் ஆறு மாத காலத்தை சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு 2019, யூலை மாதம் 14 ஆந் திகதியிலிருந்து இரண்டரை மாதங்களினால் (2 1/2) அதாவது 2019, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2019, யூலை 14.*

*8-04*


1A - G 30521 — 387 (2019/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*